நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**September 22, 2016**

# அமெரிக்க தூதரகப் போட்டி: மாணவர்களுக்கு பரிசு



கல்லூரிகளுக்கிடையே நடைபெற்ற விநாடி-வினா போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுடன் அமெரிக்க துணைத் தூதரக பொது விவகாரத் துறை அதிகாரி ஏரியல் பொல்லாக், கலாசார விவகாரத் துறை அதிகாரி எரிக் டி லண்ட், எம்.ஓ.பி. வைஷ்ணவ கல்லூரியின் துணை முதல்வர் உத்ரா உள்ளிட்டோர்.

**சென்னை,செப்.21:** அமெரிக்க தூதரகம் சார்பில் நடத்தப்பட்ட விநாடி-வினா போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

சென்னையில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகத்தின் சார்பில், 'அமெரிக்க தேர்தல் - வெள்ளை மாளிகைக்கு செல்லும் சாலை' என்ற தலைப்பில், நுங்கம்பாக்கம் எம்.ஓ.பி. வைஷ்ணவ மகளிர் கல்லூரியில் விநாடி-வினா போட்டி புதன்கிழமை நடைபெற்றது.

இதில் சென்னையில் உள்ள 35 கல்லூரிகளில் இருந்து மாணவர்கள் பங்கேற்றனர். அமெரிக்க தேர்தல், முன்னாள் அதிபர்கள் தொடர்பான கேள்விகள் கேட்கப்பட்டன.

இதில், சென்னை ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியைச் சேர்ந்த நித்யா- சூசன்ஜோசப் அணி முதல் இடத்தையும், லயோலா கல்லூரியைச் சேர்ந்த ஸ்ரீகாந்த்- ஜான் ஜார்ஜ் இரண்டாவது இடத்தையும், மூன்றாவது இடத்தை விஐடி கல்லூரியைச் சேர்ந்த கஜேந்திர கத்கர்-ராகுல் ராய் ஆகியோரும் பிடித்தனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அமெரிக்க துணைத் தூதரக பொது விவகாரத் துறை அதிகாரி ஏரியல் பொல்லாக் பரிசுகளை வழங்கினார்.